# உயர் பதவிகளில் அதிக இடங்களில் இந்திய வம்சாவளியினர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்குமான நட்பு பல ஆண்டுகாலமாக தொடர்ந்து வருகிறது.

**இந்தியாவை ஈர்க்கின்ற நாடாக அமெரிக்கா இருக்கிறது!**

இந்தியாவில் வர்த்தகம், அறிவியல், கணினி ஆகிய துறைகளில் நல்லுறவு தொடர்கிறது. கேல்லப் என்ற நிறுவனத்தினுடைய பொது கருத்து கணிப்பின்படி அமெரிக்கர்களுக்கு பிடித்த நாடுகளின் பட்டியலில் ஏழாவது இடத்தை இந்தியா பெற்றிருக்கிறது. அதேபோல் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தவர்களின் பட்டியலில் இந்திய மக்கள் இரண்டாவது இடத்தில் இருக்கிறார்கள். அமெரிக்காவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

கடந்த ஆண்டு அமெரிக்கா குடியுரிமை பெற்றவர்களில் மெக்சிகோவைச் சேர்ந்தவர்கள் 12.7 விழுக்காடு. இந்தியர்கள் இரண்டாவது இடத்தை பிடித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்தியாவை ஈர்க்கின்ற நாடாக அமெரிக்கா இருக்கிறது. அமெரிக்காவில் வாழ்கின்ற மக்களில் இந்தியர்களின் எண்ணிக்கை மிக மிக குறைவு என்றாலும் உயர் கல்வியிலும், வர்த்தகத்திலும், சிறப்பான உயர் பதவிகளிலும் இந்திய வம்சாவளியினர் மிக அதிக இடங்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

அமெரிக்க நிறுவனங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் உயர் பதவிகளில் இருக்கின்றார்கள். விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவில் இந்திய வம்சாவளி விஞ்ஞானிகள் இடம் பிடித்திருக்கிறார்கள். 2000 ஆண்டுகளுக்குப் பிறகு இருதரப்பு வர்த்தகமும் மூன்று மடங்காக உயர்ந்து விட்டது. இவையெல்லாம் இரண்டு நாடுகளுக்குமான நட்பின் அடையாளங்கள்.

### அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்குப் பாராட்டு!

**இன்று எல்லோரும் உன்னதமான இடத்தை பிடித்திருக்கிறீர்கள் என்றால், அதற்கு காரணம் உங்களது உழைப்பும், அறிவும், திறமையும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும்தான் காரணம்.**

**மிகச் சிறந்த கல்வி, அந்த கல்வியில் அறிவுக் கூர்மை, தனித் திறமைகள், நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கை, குறிப்பிட்ட இலக்கை அடைய தளராத முயற்சிகள், இவை தான் உங்களை இந்த இடத்தில் கொண்டு வந்து உயர்த்தியிருக்கிறது. பணம், புகழ், அதிகாரம், வசதி வாய்ப்புகளை விட இந்த ஐந்தும் தான் உங்களை வளர்த்து இருக்கிறது. இந்த உயர்ந்த குணங்களை மற்றவர்களுக்கும் உணர்த்தி அனைவரின் வளர்ச்சிக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.**

ஒட்டுமொத்த உலகின் நலனுக்கு இந்தியா - அமெரிக்கா உறவு மிக மிக முக்கியமாக இருக்கிறது. அமெரிக்க வாழ் இந்தியர்கள் இந்திய வம்சாவளியினர் மிகச் சிறப்பாக வாழ்ந்து வருகிறீர்கள் என்பது உங்கள் மகிழ்ச்சியான முகங்களைப் பார்க்கும் போதே எனக்கு தெளிவாகத் தெரிகிறது. இந்தியா - அமெரிக்கா நட்பு என்பது இரண்டு நாட்டு அரசுகளின் உறவாக மட்டுமில்லாமல், இரண்டு நாட்டு மக்களின் நட்புறவாகவும் எப்போதும் அமைந்திருக்கிறது என்பது தான் இரு நாடுகளுக்கிடையிலான தனிச் சிறப்பு.

**தமிழ்நாட்டில் அமெரிக்க நிறுவனங்கள்!**

அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு என்பது அமெரிக்காவின் ஈர்ப்புக்குரியதாக இருக்கிறது. புகழ்பெற்ற அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்களை நடத்தி வருகிறார்கள். இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு இருப்பது தான் இதற்கு காரணம்.

300க்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களுடைய திட்டங்களை நிறுவியிருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டுகளாக அதிகமாக அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நேரில் அழைக்கத் தான் நான் வந்திருக்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் இந்திய வம்சாவளி மக்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அமெரிக்க நிறுவனங்களை தூண்ட வேண்டும் என்று உங்களை உரிமையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு செடியையோ, மரத்தையோ ஒரு இடத்திலிருந்து எடுத்து இன்னொரு இடத்தில் நட்டால் எல்லா செடியும் மரமும் அங்கு வளருவது இல்லை. ஆனால், நீங்கள் எல்லோரும் நாடுகள் கடந்து வந்திருந்தாலும் மிக மிக சிறப்பாக வளர்ந்திருக்கிறீர்கள். இது தான் நம்முடைய இந்தியருடைய பெருமை. இது தான் அமெரிக்காவின் வளம்.

**உழைப்பால் திறமையால் உன்னத இடம்**

சிலரை சூழ்நிலைகள் துரத்தியிருக்கலாம், உங்களில் சிலர் வசதியான சூழ்நிலையிலிருந்து வந்திருக்கலாம், சிலர் வசதி குறைவினாலும் கூட இங்கு வந்திருக்கலாம். ஆனால், இன்று எல்லோரும் உன்னதமான இடத்தை பிடித்திருக்கிறீர்கள் என்றால், அதற்குகாரணம் உங்களது உழைப்பும், அறிவும், திறமையும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் தான் காரணம்.

மிகச் சிறந்த கல்வி, அந்த கல்வியில் அறிவுக் கூர்மை, தனித் திறமைகள், நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கை, குறிப்பிட்ட இலக்கை அடைய தளராத முயற்சிகள், இவை தான் உங்களை இந்த இடத்தில் கொண்டுவந்து உயர்த்தியிருக்கிறது. பணம், புகழ், அதிகாரம், வசதி வாய்ப்புகளை விட இந்த ஐந்தும் தான் உங்களை வளர்த்து இருக்கிறது. இந்த உயர்ந்த குணங்களை மற்றவர்களுக்கும் உணர்த்தி அனைவரின் வளர்ச்சிக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பது தான் நம்முடைய நாட்டின் வளர்ச்சிக்கு காரணம். வேற்றுமை எண்ணம் துளியும் இல்லாமல் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற ஒற்றுமை உணர்வோடு வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த இந்திய துணைத் தூதர் ஶ்ரீகர் ரெட்டி அவர்கள், அத்துடன் அவருக்கு துணை நின்ற அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

தூத்துக்குடி மாவட்டம் – ஏரல் கிராமத்தில்

# பட்டாசு ஆலை வெடி விபத்தில் - உயிரிழந்த குடும்பத்தினருக்கு ரூ.3 இலட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 2 -

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், குறிப்பன்குளம் கிராமத்தில் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்த இரண்டு நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர்கள் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், குறிப்பன்குளம் கிராமத்திலுள்ள, தனியார் பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் (31.8.2024) மாலை 5.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த வெடிவிபத்தில் முத்துகண்ணன் (வயது 21), த/பெ. கள்ளாண்ட நாடார் மற்றும் விஜய் (வயது 25), த/பெ. தங்கவேலு ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இந்த விபத்தில் செல்வம் (வயது 21), பிரசாந்த் (வயது 20), திருமதி.செந்தூர்கனி (வயது 45), திருமதி.முத்துமாரி (வயது 41) ஆகியோர் பலத்த காயமடைந்து திருநெல்வேலி மற்றும் சாத்தான்குளம் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த வெடிவிபத்தில் உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக்கொள்வதுடன் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சம், பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

# வடலூர் பணிமனையில் பணியாளர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், செப். 2 -

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) லிட். சார்பில் வடலூர் பணிமனையில் பணியாளர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறையை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு புதிய பேருந்து சேவைகளை 30.08.2024, வெள்ளிக் கிழமை, மாலை, 3.30 மணியளவில், தொடங்கி வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், முன்னிலையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) லிட். கடலூர் மண்டலத்திற்குட்பட்ட வடலூர் பணிமனையில் பணியாளர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறையை திறந்து வைத்து பார்வையிட்டார். தொடர்ந்து,

வடலூர் பணிமனையில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்திட வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலான பணியாணையை அரசு போக்குவரத்து கழகம், கடலூர் மண்டல பொது மேலாளர் அவர்களிடம் வழங்கினார்.

வடலூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர் விடியல் பயணம் திட்டத்தில் சிதம்பரம் குறிஞ்சிப்பாடி (வழி கொத்தவாச்சேரி, சாத்தப்பாடி) வழித்தடத்தில் புதிய பேருந்து சேவை மற்றும் சிதம்பரம் திருப்பதி (புறப்படும் நேரம், சிதம்பரம் காலை 6.45 , திருப்பதி இரவு 18.50) வழித்தடத்தில் மற்றொரு புதிய பேருந்து சேவை என இரண்டு புதிய அரசு பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

வடலூர் பேருந்து நிலையம் உட்கட்டமைப்பு வசதிகள் நிதியின் கீழ் ரூ.5.85 கோடி மதிப்பீட்டில் கட்டுமான பணிகள் நடைபெறுவதையும், மேலும், வடலூர் பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.110 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையத்தில் சுற்றுச்சுவர் மற்றும் பேருந்து ஓடுபாதை அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கடலூர் மண்டல பொது மேலாளர் சி.கே.ராகவன், மாவட்ட கல்விக்குழு தலைவர் வி.சிவகுமார், கடலூர் மண்டல போக்குவரத்து தொ.மு.ச பொது செயலாளர் தங்க ஆனந்தன், தலைவர் பி.பழனிவேல், பொருளாளர் செந்தில்நாதன், அமைப்பு செயலாளர் பாலவிநாயகம், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர். பாலமுருகன்,

வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், நகர செயலாளர் த.தமிழ்ச்செல்வன், நகர மன்ற துணைத் தலைவர் சுப்புராயலு, மற்றும் போக்குவரத்து கழக அலுவலர்கள், நகராட்சி அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

# அரியலூர் நகரப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், செப். 2 -

அரியலூர் மாவட்டம் அரியலூர் நகரத்தில் கழகத் தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி,

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகர பொது உறுப்பினர்கள் கூட்டம், அரியலூர் எஸ்.டி.மேரீஸ் திருமண மண்டபத்தில், நகர அவைத் தலைவர் மாலா.தமிழரசன் தலைமையில், நகர செயலாளர் இரா.முருகேசன் வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அவர்கள், கழக சட்டத் திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மா.இராஜேந்திரன், செல்வராணி ரவீந்தர், கோ.உத்திராபதி, மா.சண்முகம், நா.ஜெயகுமார், க.ராமு,க. கருணாநிதி

ஆகியோர் முன்னிலை வகித்தனர். நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேசினார்.

அரியலூர் மாவட்டத்தை உருவாக்கி தந்தது நம் தலைவர் கலைஞர் தான், அதேபோல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கொண்டுவந்தது தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் என்பதை மறந்துவிடகூடாது நகரப் பகுதிகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது மேலும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே திமுக ஆட்சியில் தான் அரியலூருக்கு பலதிட்டங்கள் வந்து உள்ளது அரியலூர் நகர் பகுதியில் வரும் தேர்தலில் திமுக அதிக அளவில் வாக்குகள் பெறுவதற்கு நிர்வாகிகள் முழுமையாக தங்களை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்ற வேண்டும் என பேசினார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திர சேகரன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன்,

நகர் மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி, அருண் ராஜா, பி.பி.செல்வம், ஆ.குணா, தங்கை.எழில்மாறன், ராஜசேகரன், விஜயலட்சுமி செல்வராஜ், டி. ஆர்.அன்பழகன், காந்திமதி சுகுமாரன், ராணி சந்திரசேகர்,மகேந்திரன்,

கதிரவன்,இரா.சுர்ஜித், ராஜ்குமார், குமரேசன், .அசோக், நூர்தின் ராஜா, ஜெயராமன் , சரவணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இறுதியாக நகர துணை செயலாளர் சி.ஜெய்குமார் நன்றி கூறினார்.

---

கடலூர் மேற்கு மாவட்டம்

# நெய்வேலி சட்டமன்றத் தொகுதி பொது நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் -அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், செப். 2-

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆனைக்கேற்ப கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்ட மன்ற தொகுதி ஒன்றிய, நகர, வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் 3.9.2024 அன்று கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது.

காலை : காலை 9 மணி குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம் K.N.T. மஹால் நெய்வேலி காலை: 11.30 மணி பண்ருட்டி தெற்கு ஒன்றியம் A.V. மஹால் காடாம்புலியூர் மாலை: 4 மணி நெய்வேலி நகரம் தொ.மு.ச. அலுவலகம் நெய்வேலி



அதுசமயம் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை கழக , வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் , உள்ளாட்சி மன்ற பிரதிநிதி கள் தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும் என கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



தேனி நாடாளுமன்ற இந்தியா கூட்டணி திமுக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன் அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து உசிலம்பட்டி தொகுதியில் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து சிறப்பாக தேர்தல் பணியாற்றிய மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட கழகத்தினருக்கு மோதிரங்களை வழங்கி சிறப்பித்த போது எடுத்த படம். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் கே.ஐ.மகிழன்,செல்லம்பட்டி முத்துராமன், எஸ். ஓ.ஆர்.தங்கபாண்டியன், அஜித் பாண்டி, சுதாகரன், எம்.பி.பழனி, எஸ். வி.என்.முருகன், ஜெயச்சந்திரன், செல்வபிரகாஷ், சங்கரபாண்டி, ஜெயராமன், சரவணன், கல்யாணி, மோகன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.



தேனி தெற்கு மாவட்டம், உத்தமபாளையம் கிழக்கு ஒன்றியம், கோம்பை பேரூராட்சியில் புதுக்குளம் கண்மாய் பிள்ளைகுழி மேடு பாலம், மற்றும் சிந்துல்வாங்கு கரும்பாறை ஓடை பாலம் ஆகிய பாலங்கள் கட்டுமான பணிக்கான பூமி பூஜை தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய செயலாளர் அணைப்பட்டி முருகேசன், பேரூராட்சி தலைவர் முல்லை மோகன்ராஜா பேரூர் கழக செயலாளர் பாறை முருகன், பேரூராட்சி துணைத் தலைவர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் தங்கராஜ் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் பேரூராட்சி கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.